**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 18 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.100/2024**

பாலசரஸ்வதி ....**வாதி**

**//எதிர்//**

1) கார்த்திக்

2) காளியப்பன் .......**பிரதிவாதிகள்**

இவ்வழக்கு எனது முன்னிலையில் கடந்த 09.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கனகராஜா அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் வருகையில்லாத காரணத்தால் அவர்களை தோன்றாத்தரப்பினர்களாகக் கொண்டும் மற்றும் வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, வாதியால் தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையைப் பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட பின்பு, வழக்கு முதல் விசாரணையில் 1 ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜாராகாத காரணத்தினால் 1 ம் பிரதிவாதிக்கு

எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதன்பின்பு, 2ம் பிரதிவாதிக்கு போதுமான வாய்ப்புகள் அளித்தும் 2ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்த காரணத்தினால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதன்பின்பு, 2ம் பிரதிவாதி தரப்பில், அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய இ.ம.எண்.4/2025 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, 2ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், 2ம் பிரதிவாதி தரப்பில், வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் அளித்தும், 2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்து வந்த நிலையிலும், 2ம் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜாராகாத காரணத்தினாலும், மீண்டும் 2ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**வழக்குரையின் சுருக்கம்:**

**3)** தாவா சொத்து வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டதாகும். கடந்த 09.11.1994 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் தாவா சொத்தை வாதி 2ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். 2ம் பிரதிவாதி காளியப்பன் தனக்காகவும், தனது இளவர் மகள்களுக்காகவும் தாவா சொத்தை வாதிக்கு தகுந்த மறுபயனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி கிரைய தேதியிலிருந்து தற்போது வரை வாதியே தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார்.

தாவா சொத்து காலியிடமாகும். தாவா சொத்து சம்பந்தமான வருவாய் துறை ஆவணங்கள் வாதி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டன.

**4)** இந்நிலையில், வாதி தனது மகனின் திருமண செலவிற்காக தாவா சொத்தை விற்பனை செய்ய முற்பட்டபோது, 2ம் பிரதிவாதியின் உறவினரான 1ம் பிரதிவாதி மேற்படி விவரங்களை தெரிந்துகொண்டு, கடந்த 03.07.2024 அன்று வாதியின் வீட்டிற்கு வந்து தாவா சொத்தை குறைந்த விலைக்கு தனக்கு விற்பனை செய்யுமாறு வாதியை கட்டாயப்படுத்தினார். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மிக நெருங்கிய உறவினர் ஆவார். அலைபேசி மூலமும், நேரிலும் வாதிக்கு இந்த பிரதிவாதிகள் அச்சுறுத்தல்கள் கொடுத்ததோடு, தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்து வருகிறார்கள். இதனைத் தொடர்ந்து, கடந்து 13.07.2024 அன்று பாலவிடுதி காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் வாதி முறையிட்டபோது, CSR No.260/2024 என்ற குற்ற வழக்கு விசாரணை எண் பதிவு செய்யப்பட்டு, கடந்த 15.07.2024 அன்று அதன் ரசீது வாதிக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில், பிரதிவாதிகளை காவல் அதிகாரிகள் விசாரணைக்கு அழைத்தபோது, பிரதிவாதிகள் விசாரணைக்கு வரவில்லை. அதுமட்டுமல்லாமல், இந்த பிரச்சினையானது உரிமையியல் சம்பந்தமான பிரச்சினையாக இருப்பதால், காவல்துறையினர் வாதியின் வழக்கை ஏற்றுக்கொள்ளவில்லை.

**5)** தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாமல், இந்த பிரதிவாதிகள் வாதியின் உரிமையை தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்கள். வாதி பெண்ணாக இருக்கும் காரணத்தினால், பிரதிவாதிகளின் தடை மற்றும் இடையூறுகளை தாங்கிக்கொள்ள முடியவில்லை. பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. வாதி தஞ்சாவூரில் வசித்து

வருகிறார். இந்த பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அருகே வசித்து வருகிறார்கள்.

6) தாவா சொத்தில் வாதிக்கு முழுமையான உரிமையுள்ளது. பிரதிவாதிகள் தாவா சொத்தின் அருகில் உள்ளவர்கள் என்பதாலும், தாவா சொத்து காலியிடமாக உள்ளதை பயன்படுத்திக்கொண்டும், வாதி தஞ்சாவூரில் வசித்து வருவதை பயன்படுத்திக்கொண்டும், தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்து வருகிறார்கள். அவர்களுக்கு அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்ய எவ்வகையான உரிமையும் இல்லை. இந்நிலையில், கடந்த 14.08.2024 அன்று இந்த பிரதிவாதிகள் மீண்டும் ஒருமுறை தாவா சொத்தில் உள்ள வாதியின் அமைதியான அனுபவத்தை கொட்டகை அமைத்து அபகரிக்க முற்பட்ட நிலையில், வாதி தனது அருகில் உள்ள உறவினர்கள் உதவியுடன் மேற்படி பிரதிவாதிகளின் செய்கையை மிகுந்த சிரமத்துடன் தடுத்து விட்டார். அதன்பின், காவல்துறையினர் மீண்டும் இவ்வழக்கு உரிமையியல் பிரச்சினை சம்பந்தமாக உள்ளதால் அதனை ஏற்க மறுத்து விட்டார்கள்.

7) தாவா சொத்தில் தனது உரிமையின் அடிப்படையில் உள்ள அனுபவத்தை பாதுகாக்க வேண்டி வாதி இந்நீதிமன்றத்தை அணுகி உள்ளார். பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு முற்றிலும் அந்நியர் ஆவார்கள். வாதியின் உரிமையானது முற்றிலும் பாதுகாக்கப்படவேண்டும். பிரதிவாதிகள் மிகுந்த அரசியல் செல்வாக்கும், பண பலமும் உள்ளவர்கள். சட்டத்தை பிரதிவாதிகள் தங்களது கையில் எந்நேரத்திலும் எடுக்கக்கூடியவர்கள். அதனால் வாதிக்கு ஏற்படும் இழப்பானது பணத்தால் ஈடு செய்யமுடியாதது ஆகும். மேற்படி செய்கைகளை தடுக்க

இந்நீதிமன்றத்தின் தடை உத்தரவு வேண்டியே இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டிருந்த எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

**8)** இவ்வழக்கு பொய்யானதும், மோசடியானதும் ஆகும். சட்டத்தின் படியும், நியாயத்தின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வாதியால் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் இந்த பிரதிவாதியால் முற்றிலும் மறுக்கப்படுகின்றன. தாவா சொத்து வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்றும், கடந்த 09.11.1994 அன்று 2ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை வாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளதையும் இந்த பிரதிவாதி மறுக்கிறார். மேலும், தாவா சொத்தை தனது மகனின் திருமண செலவிற்காக விற்பனை செய்ய முற்பட்டு வருவதாகவும், அதனைத் தொடர்ந்து இந்த பிரதிவாதிகள் கடந்த 03.07.2024 அன்று வாதியின் வீட்டிற்கு சென்று தாவா சொத்தை தனக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய கோரி வாதியை இந்த பிரதிவாதி மிரட்டியதாகவும் சொல்வது முற்றிலும் மறுக்கப்படுகின்றன.

**9)** மேலும், பிரதிவாதிகள் இருவரும் நெருங்கிய உறவினர்கள் என்றும், வாதியை அலைபேசி மூலமும் மற்றும் நேரிலும் மிரட்டி வருவதாக சொல்லியுள்ளதை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மேலும், கடந்த 13.07.2024 அன்று பாலவிடுதி காவல்நிலையத்தில் வாதி புகார் அளித்தாகவும், பிரதிவாதிகள் புகார் விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் இருந்ததாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் முற்றிலும் பொய்யாகும். பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்று வாதியால் சொல்லியுள்ள சங்கதிகள்

அனைத்தும் மறுக்கப்படுகின்றன. மேலும், கடந்த 14.08.2024 அன்று இந்த பிரதிவாதிகள் ஆட்கள் மூலம் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்து வாதியை மிரட்டியதாக சொல்வது முற்றிலும் பொய்யாகும். பிரதிவாதிகள் அரசியல் பலமும், மிகுந்த செல்வாக்கும் உள்ளவர்கள் என்பதால், சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு இந்த வாதியின் உரிமையை பறிப்பதாக வாதியால் சொல்லப்பட்டுள்ள அனைத்தும் பொய்யாகும். அவற்றை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

**10)** இந்த 2ம் பிரதிவாதி தாவா சொத்தை வாதிக்கு மேற்சொன்னபடி கடந்த 09.11.1994 அன்றோ அல்லது வேறு எந்த தேதியிலோ எவ்வகையான கிரையமும் செய்து கொடுக்கவில்லை. வாதியால் மேற்சொன்ன கிரைய ஆவணமானது, போலியாக வனையப்பட்ட ஆவணம் ஆகும். மேற்படி கிரைய ஆவணத்தின்படி, வாதி பெயருக்கு வருவாய்துறை ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை இந்த பிரதிவாதி முற்றிலும் மறுக்கிறார். அவ்வாறு வருவாய்துறை ஆவணங்களில் மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் மாற்றம் ஏற்பட்டால், அது முற்றிலும் சட்டத்திற்கு முரணானது ஆகும். தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் வாதியே இருக்கிறார் என்பதை இந்த பிரதிவாதி முற்றிலும் மறுக்கிறார். உண்மையில், இந்த பிரதிவாதியே தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார். தாவா சொத்தில் தனது உரிமையை இந்த பிரதிவாதி எப்போதும் யாருக்கும் எந்த காலத்திலும் கொடுத்ததில்லை.

**11)** தாவா சொத்தில் பிரதிவாதிகள் அத்து மீறி அபகரிக்க முயற்சி செய்வதாக சொல்வது முற்றிலும் பொய். மாறாக, இந்த வாதியே தாவா சொத்தில் உள்ள இந்த பிரதிவாதியின் அனுபவத்தை இடையூறு செய்து

வருவதோடு, இந்த பொய்யான வழக்கையும் தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் இந்த வாதிக்கு எவ்வகையான உரிமையும், உடமையும், அனுபவமும் இல்லை. இவ்வழக்கிற்கான வழக்குமூலம் சரியல்ல. தாவா சொத்து விவரம் சரியல்ல. எனவே, இவ்வழக்கானது இந்த பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**எழுவினாக்கள்:**

**12)** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த எதிர்வழக்குரை மற்றும் இதர ஆவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது:

**1)** Whether the Plaintiff is in the possession of the suit property as alleged by her?

**2)** Whether the 2nd Defendant is in the possession of the suit property as alleged by him?

**3)** Whether the Defendants have disturbed the Plaintiff's possession over the suit property?

**4)** Whether this suit is maintainable without seeking the relief of declaration of title over the suit property?

5) To what other relieves?

**தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:**

**13)** மேற்படி எழுவினாக்கள் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டிருந்தாலும், வாதி தரப்பு சாட்சியான வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்ய 2ம் பிரதிவாதி தரப்பினர் முன் வராத காரணத்தினாலும், போதுமான வாய்ப்புகள் வழங்கியும், 2ம் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் 2ம் பிரதிவாதி ஆஜாராகாத காரணத்தினாலும், 2ம்

பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. **எனவே, வாதி கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற வாதி தகுதியுடையவரா? இல்லையா? என்பதே தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கிய கேள்வியாகும்.**

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**14)** வாதியின் வழக்கை நிரூபணம் செய்ய வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பு சாட்சியம் வா.சா.1 உடன் முடித்து வைக்கப்பட்டது.

**<u>தீர்வு:</u>**

**15)** மேற்படி வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதியின் வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில், வா.சா.1 யை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தினால், 2ம் பிரதிவாதியானவர் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டு, அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**16)** தாவா சொத்திற்கு வாதியே முழுமையான உரிமையாளர் என்றும், வாதி தாவா சொத்தை 2ம் பிரதிவாதியிடமிருந்து கடந்த 09.11.1994 அன்று பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாக கிரையம் பெற்று, மேற்படி தேதியிலிருந்து வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில் தற்போது தனது

மகனின் திருமண செலவிற்காக தாவா சொத்தை விற்பனை செய்ய முற்படும் நிலையில், 1ம் பிரதிவாதி தாவா சொத்தை குறைந்த விலைக்கு விற்பனை செய்ய கோரி வாதியிடம் பிரச்சினை செய்வதாகவும், மேலும் பல தேதிகளில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வாதியின் அனுபவத்தை இடையூறு செய்து வருவதாகவும், மேற்படி பிரச்சினை சம்பந்தமாக காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டும், உரிமையியல் வழக்காக இருப்பதால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுக அறிவுறுத்தியதன் பேரில், வாதி இவ்வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

**17)** வா.சா.ஆ.1 ஆவணமானது, கடந்த 09.11.1994 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகலாகும். மேற்படி வா.சா.ஆ.1 யைப் பரிசீலனை செய்கையில், வாதி பாலசரஸ்வதி என்பவருக்கு, காளியப்பன் என்பவர் தனக்காகவும் தனது இளவர் மகள்களான பழனியம்மாள், கற்பகவள்ளி ஆகியோருக்காகவும் சேர்த்து தாவா சொத்தை மேற்படி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாக தகுந்த மறுபயனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.2 ஆவணமானது தாவா சொத்திற்கான பட்டாவின் பதிவிறக்க நகலாகும். மேற்படி வா.சா.ஆ.2 யைப் பரிசீலனை செய்கையில், பட்டா எண்.199 என்ற பட்டாவில் கடவூர் வட்டம், இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.744/4 ல் உள்ள ஹெக்.1.4.50 ஏர்ஸ் நிலத்திற்கு வாதி பெயரில் மேற்படி பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**18)** வா.சா.ஆ.3 ஆவணமானது, கடந்த 13.07.2024 அன்று வாதியால் பாலவிடுதி காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகார் மனுவின் கையிருப்பு நகல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.3 யைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தில் வாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், பிரதிவாதிகள் பல தேதிகளில் தனது வீட்டிற்கு வந்து வாதியை மிரட்டியதாகவும், தொலைபேசியிலும், நேரிலும் பிரதிவாதியின் வாதியை மிரட்டி வருவதாகவும், அதுமட்டுமல்லாமல் தாவா சொத்தை வாதியிடமிருந்து பிரதிவாதிகள் பறித்துக் கொள்ள முயற்சி செய்து வருவதாகவும், பிரதிவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் மேற்படி புகார் மனுவானது வாதியால் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிகின்றது. ஆனால், மேற்படி புகார் மனுவில் வாதியின் கையொப்பம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**19)** வா.சா.ஆ.4 ஆவணமானது, கடந்த 15.07.2024 அன்று பாலவிடுதி காவல் நிலையத்தில் வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து சம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகார் மனுவின் ரசீது ஆகும். மேற்படி வா.சா.ஆ.4 யைப் பரிசீலனை செய்கையில், மேற்சொன்ன தேதியில் வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில், பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படி வாதியால் தாக்கல் செய்யப்பட்ட புகாரானது, பாலவிடுதி காவல் நிலையத்தாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**20)** வா.சா.ஆ.5 ஆவணமானது, கடந்த 16.09.2025 தேதியிட்ட வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக பாலவிடுதி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரிடம் அளித்த புகார் மனுவின் கையிருப்பு நகல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.5 யைப் பரிசீலனை செய்கையில், வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே இவ்வழக்கு நடைபெற்று நிலுவையில் இருந்து வருவதாகவும்,

இந்நிலையில் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் சுமார் ரூ.3,00,000/– மதிப்புள்ள பல ஜாதி மரங்களை பிரதிவாதிகள் வெட்டிவிட்டதாகவும், அதை தட்டிக்கேட்டால் அரிவாளால் வெட்டிவிடுதாக மிரட்டியதாகவும், நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மேற்படி புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

**21)** வா.சா.ஆ.6 ஆவணமானது, கடந்த 07.10.2025 தேதியிட்ட வாதியால் பாலவிடுதி காவல் நிலையத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகார் மனுவிற்கான ரசீது ஆகும். மேற்படி வா.சா.ஆ.6 யைப் பரிசீலனை செய்கையில், வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கும் இடையே நில பிரச்சினை சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும், இந்நிலையில் பிரதிவாதிகள் வாதியின் நிலத்தில் உள்ள மரத்தை வெட்டிவிட்டதாகவும் மேற்படி புகாரானது வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**22)** மேற்படி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும், வழக்கு கோப்புகளையும் பரிசீலனை செய்கையில், வாதியே தாவா சொத்தின் முழுமையான உரிமையாளர் என்று வாதியால் சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா சொத்து விவரத்தை பரிசீலனை செய்கையில், தே.இடையப்பட்டி கிராமம் (மேற்கு), கிராம பஞ்சாயத்து சாலைக்குட்பட்டு, புல எண்.744/4 ல் ஹெக்.1.04.5 ஏர்ஸ்க்கு ஏக்.2.58 சென்ட் நிலமானது குறிப்பிட்ட நான்கு எல்லைக்குள் வாதியால் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அதனைத் தொடர்ந்து மேற்படி கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.744/2 ல் ஹெக்.0.02.0 க்கு ஏக்.0.05 சென்ட்டில் பொதுவில் பாதி 2 ½ சென்ட் நிலத்தையும், அதில் உள்ள கிணர் ஒன்றில் பாதி பாத்தியமும், மேற்படி கிணற்றில் பொருத்தப்பட்டிருக்கும் 5HP மின்சார

மோட்டார் பம்ப்செட் ஒன்றில் பாதி பாத்தியம் உட்படவும், மேலும் மேற்படி புல எண்.744/4 ல் உள்ள காய்ப்புக்கு வராத ஐந்து தென்னை மரத்தையும் சேர்த்து ஏக்.2.60 ½ சென்ட் நிலம் என்று குறிப்பிட்டு தாவா சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது.

**23)** மேலும், வா.சா.ஆ.1 ஆவணமானது, பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.1 யைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள மேற்படி இரண்டு புல எண்களில் உள்ள நிலங்களையும் அதில் கூறப்பட்டுள்ள உரிமைகளையும் சேர்த்து வாதியால் மேற்கண்ட கிரைய ஆவணத்தின் மூலம் தகுந்த மறுபயனுக்கு கிரையமாக தாவா சொத்து பெறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இதன்மூலம், தாவா சொத்தின் முழுமையான உரிமையாளர் வாதிதான் என்பதை வாதி தரப்பில் நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணமாக உள்ள நிலையில், மேற்படி ஆவணம் குறித்து இந்த பிரதிவாதிகள் எவ்வகையான ஆட்சேபனைகளும் தெரிவிக்க முன்வராத நிலையிலும், மேற்படி வா.சா.ஆ.1 கிரைய ஆவணமானது உண்மையான ஆவணம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதன்படி, வாதியே தாவா சொத்தின் முழுமையான உரிமையாளர் என்பதை அறிய முடிகின்றது.

**24)** அதுமட்டுமல்லாமல், வா.சா.ஆ.2 பட்டாவானது, தாவா சொத்தின் புல எண்.744/4 ல் உள்ள ஹெக்.1.4.50 ஏர்ஸ் நிலத்திற்கான பட்டா என்பதை அறிய முடிகின்றது. மேற்படி நிலத்திற்கான பட்டா, வாதி பெயரில் பட்டா எண்.199 ல் அமைந்துள்ளது. மேற்படி புல எண்.744/4 ல் உள்ள நிலமானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என்பதை

மேற்படி பட்டாவின் அடிப்படையில் வாதி நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், தாவா சொத்தில் காண்பிக்கப்பட்டுள்ள இதர நிலங்களான புல எண்.744/2ல் உள்ள பொதுவில் பாதி 2 ½ சென்ட் நிலமும், அதில் உள்ள கிணர் ஒன்றில் பாதி பாத்தியமும், மேற்படி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5 HP மின்சார மோட்டார் பம்ப்செட் ஒன்றில் பாதி பாத்தியமும் உட்படவும், வாதிக்கு வாசா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இருப்பினும், மேற்படி புல எண்.744/2ல் உள்ள மீதி பாதி நிலம் மற்றும் கிணற்றில் உள்ள மீதி பாதி பாத்தியமும் மற்றும் 5HP மின்சார மோட்டார் பம்ப் செட்டில் உள்ள மீதி பாதி பாத்தியமும் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி வசம் உள்ளது என்பதை வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் அறிய முடிகின்றது.

**25)** இந்நிலையில், மேற்படி புல எண்.744/2ற்கான பட்டாவானது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும், மேற்படி நிலங்களில் வாதி மற்றும் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதியாகிய இருவருக்கும் உரிமையுள்ளது என்பதை அறிய முடிகின்றது. அவ்வாறு உரிமையிருந்தாலும், மேற்படி புல எண்.744/2ல் உள்ள பாதி நிலம் மற்றும் அதில் உள்ள கிணர் மற்றும் 5 HP மின்சார மோட்டார் பம்ப் செட் ஆகியவற்றில் பாதி பாத்தியமும் 2ம் பிரதிவாதியால், வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணப்படி வாதிக்கு தகுந்த மறுபயனுக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்பதை அறிய முடிகின்றது. எனவே, மேற்படி புல எண்.744/2ல் உள்ள பாதி நிலமும், கிணர் ஒன்றில் பாதி பாத்தியமும் மற்றும் 5HP மின்சார மோட்டார் பம்ப்செட் ஒன்றில் பாதி பாத்தியமும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில், வாதியே மேற்படி தான் கிரையம் பெற்ற சொத்துக்களின்

உரிமையாளராக உள்ள நிலையில், தாவா சொத்து வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்று வாதியால் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது.

**26)** இந்நிலையில், காலி மனைகள் குறித்து சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது என்னவென்றால், காலி மனையின் உரிமையாளரே, மேற்படி காலி மனையின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாக அனுமானம் செய்யவேண்டுமென்று சட்டம் வரையறுத்துள்ளது. எனவே, தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.1 கிரைய ஆவணப்படி தாவா சொத்திற்கு வாதியே உரிமையாளராக உள்ள நிலையில், தாவா சொத்து காலி மனையாக இருக்கும் நிலையில், வாதியே தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதுமட்டுமல்லாமல், மேற்படி புல எண்.744/4 ற்கு வாதி பெயரில் உள்ள பட்டா வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவைப் பரிசீலனை செய்கையிலும், இதர ஆவணங்களைப் பரிசீலனை செய்ததிலும், தாவா சொத்தில் வாதியின் உரிமைமூலமும், அனுபவ பாத்தியமும் வாதியால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**27)** இந்நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள காவல்துறையில் அளித்த புகார் மனு மற்றும் அதன் ரசீதுகள் ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் இவ்வழக்கு நிலுவையில் இருந்து வரும் சமயத்திலும், தாவா சொத்தில் உள்ள வாதியின் அமைதியான அனுபவத்தில் இந்த பிரதிவாதிகள் பல்வேறு காலகட்டத்தில் இடையூறு செய்து பிரச்சினை செய்து வந்ததாக தெரிகின்றது. மேற்படி வா.சா.ஆ.4 புகார் மனு ரசீதை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்பு, கடந்த 15.07.2024 அன்று மேற்படி புகார் மனு ரசீதானது வாதியால் இந்த பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து கொடுத்த புகாரின் அடிப்படையில் ஏற்பட்ட மனுவின் ரசீது என்பதை அறிய முடிகின்றது. அதில், வாதி தனது மகனின் திருமண செலவிற்காக தாவா சொத்தை விற்க சென்றபோது, பிரதிவாதிகள் விற்பனை செய்யவிடாமல் தடுத்து மிரட்டி வருவதாக வாதி புகார் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. அதுமட்டுமல்லாமல், கடந்த 07.10.2025 அன்று வா.சா.ஆ.6 புகார் மனு ரசீதில், இவ்வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில், இந்த பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள மரங்களை வெட்டி விட்டதாக மேற்படி புகார் வாதியால் பாலவிடுதி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**28)** மேற்படி புகார் மனுக்கள் மற்றும் ரசீதுகளைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தில் உள்ள வாதியின் அமைதியான அனுபவத்தை இவ்வழக்கின் பிரதிவாதிகள் தொடர்ந்து இடையூறு செய்து வந்துள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது. எனவே, தாவா சொத்தில் உள்ள வாதியின் அமைதியான அனுபவத்தை இந்த பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகிறார்கள் என்பதை வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. தாவா சொத்தில் உள்ள வாதியின் அனுபவத்தை பிரவிவாதிகள் இடையூறு செய்து வருவதை வாதி நிரூபணம் செய்துள்ள நிலையில், பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது, வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**29)** மேலும், தாவா சொத்தில் காண்பிக்கப்பட்டுள்ள புல எண்.744/2ல் உள்ள நிலத்தில் மீதமுள்ள பாதி நிலமான 2 ½ சென்ட் நிலம், அதில் உள்ள

கிணர் ஒன்றில் மீதமுள்ள பாதி பாத்தியம், மேற்படி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5 HP மின்மோட்டார் மீதமுள்ள பம்ப்செட்டில் பாதி பாத்தியமும் இந்த 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக உள்ள நிலையில், மேற்படி சொத்துக்களில் மற்றொரு பாதி பாகத்தை மட்டுமே வாதிக்கு வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் 2ம் பிரதிவாதி விற்பனை செய்துள்ளார். இந்நிலையில், மீதமுள்ள பாதி பங்கில் 2ம் பிரதிவாதிக்கு உரிமையுள்ள நிலையில், வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின்படி மற்றொரு பங்கை 2ம் பிரதிவாதி தகுந்த மறுபயனுக்காக வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ள நிலையில், மேற்படி கிரையம் பெற்ற சொத்தை தன் இஷ்டம் போல் அனுபவம் செய்ய அனைத்து வகையிலும் வாதிக்கு உரிமையுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்படி உரிமையை மற்றொரு பங்கின் உரிமையாளராகிய இந்த 2ம் பிரதிவாதியோ, அல்லது வேறு எவருமோ தடை செய்ய எவ்வகையிலும் உரிமையில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, வாதி கோரியுள்ளபடி பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற அனைத்து வகையிலும் வாதி தகுதியுடையவர் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**முடிவு:**

முடிவாக, இவ்வழக்கானது வாதி கோரியுள்ளபடி பின்வரும் பரிகாரத்திற்காக அனுமதிக்கப்படுகின்றது:

**1)** தாவா சொத்தில் உள்ள வாதியின் அமைதியான அனுபவத்தை இந்த பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ அல்லது வேறு எவருமோ எவ்வகையிலும் தடை இடையூறு செய்யக்கூடாது என்று இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை உத்தரவானது பிறப்பிக்கப்படுகின்றது.

**2)** செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ம் நாளாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.06.18 13:11:19 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**

**வாதி தரப்பு சாட்சி:**

**வா.சா.1** –பாலசரஸ்வதி **(வாதி)**

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.1** | 09.11.1994 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.2** | 18.09.2024 | பட்டா எண்.199 ற்கான பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.3** | 13.07.2024 | வாதியால் பாலவிடுதி காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் பிரதிவாதிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகார் மனுவின் கையிருப்பு நகல் |
| **வா.சா.ஆ.4** | 15.07.2024 | பாலவிடுதி காவல் நிலையத்தில் வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து சம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகார் மனுவின் ரசீது |
| **வா.சா.ஆ.5** | 16.09.2025 | வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக பாலவிடுதி காவல் நிலையத்தில், காவல் உதவி ஆய்வாளரிடம் அளித்த புகார் மனுவின் கையிருப்பு நகல் |
| **வா.சா.ஆ.6** | 07.10.2025 | வாதியால் பாலவிடுதி காவல் நிலையத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகார் |

| | | |
|---|---|---|
| | | மனுவிற்கான ரசீது |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை</u>**

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.06.18 13:11:26 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**